
# நாட்டார் வழிபாடு

## 20ஆம் அத்தியாயம்

## தரம்-10



ஆசிரியர்-லோரன்ஸ் லோகேஷ்வரி

கே. தெஹி. நூரி தமிழ் வித்தியாலயம்

# இந்து சமய வழிபாட்டு முறைகள்

1. ஆகமம் சாரா வழிபாடு
2. ஆகமம் சார் வழிபாடு

| பெருதெய்வங்கள் | சிறு தெய்வங்கள் |
| --- | --- |
| • சிவன்<br>• முருகன்<br>• விநாயகர்<br>• விஷ்ணு | • கண்ணகி<br>• நாகதம்பிரான்<br>• ஐயனார்<br>• திரௌபதையம்மன்<br>• வைரவர் |

# நாட்டார் வழிபாடு –பாரம்பரிய மரபுகளின் அடிப்படையில் இடம்பெறுவது ஆகும்.

- சிறு தெய்வங்களுக்கு இத்தகைய வழிபாடுகள் இடம்பெறும்.
- எளிமையான நடைமுறைகளைக் கொண்டதாகும்.


# ஆகமம் சாரா வழிபாட்டை

- கிராமிய  தெய்வ வழிபாடு
- குல தெய்வ வழிபாடு
- நாட்டார் வழிபாடு
- சிறு தெய்வ வழிபாடு           என்றும் அழைப்பர்.

# “சடங்கு” என்பதன் பொருள் செயல் என பொருள்படும்.

- சிறு தெய்வங்களுக்கு நம்பிக்கையின் அடிப்படையில் பக்தியோடு ஆற்றப்படும் செயல்கள் எல்லாம் சடங்குகளாகும்.

# திரௌபதையம்மன்







# திரௌபதையம்மன் வழிபாடு.......

- திரௌபதை மகாபாரதம் எனும் இதிகாசத்தின் நாயகியாக விளங்குபவள்.

- பாஞ்சால மன்னன் புத்திரப்பேறு வேண்டி யாகம் செய்தபோது யாகாக்கினியில் தோன்றியவள்.

- பஞ்சபாண்டவர்களின் மனைவி

* தெய்வ துணையால் தன் மானத்தை காத்துக் கொண்டவள்.

* கூந்தலை துரியோதனன் முதலானோரை அழித்த பிறகே முடிப்பதாகச் சபதம் மேற்கொண்டு அச் சபதத்தை நிறைவேற்றியவள்.

* நீதி உணர்வும் மான உணர்வும் வீரமும் பெண்மையும் நிரம்பிய திரௌபதை மக்களால் தெய்வ நிலையில் போற்றப்படுகின்றாள்.

*கிழக்குகரையில்-  மட்டக்களப்பு,அம்பாறை

---

*மேற்குக்கரையில்- புத்தளம்
சிறப்பு பெறுகிறது.

- பாண்டிருப்பு,பழுகாமம்,புளியந்தீவு,மட்டிக்களி,
புதூர்,மகிழவெட்டுவான் திரௌபதையம்மன்
ஆலயங்கள் அமைந்துள்ளன.

# பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயம்.

- பாண்டவர்கள் உறைந்திருந்த இடம் என்ற காரணத்தால் இப் பெயர் வந்தது.
- மட்டக்களப்பு நகர்-30 கி மீ தூரத்தில் அமைந்துள்ளது .
- திரௌபதையம்மன் ஆலயம் அமைய தாதன் காரணமாக இருந்ததான் என்று தாதன் கல்வெட்டு கூறுகின்றது.

- வருடாந்த சடங்கு-புரட்டாதி மாதம் செவ்வாய் கிழமை கதவு திறத்தல் வைபவத்தோடு ஆரம்பமாகும்.

---

- அடுத்து வரும் பூரணையோடு கூடிய வெள்ளிக்கிழமையில் நிறைவு பெறும்.

- 18 நாள் இடம்பெறும்.

- கொடியேற்றச் சடங்கு, சமயம் எடுத்தல், சுவாமி எழுந்தருளப்பண்ணல்,நாட்கால் வெட்டும் சடங்கு,வனவாசம் போதல்,தவநிலை சடங்கு, தீமிதிப்பு, பாற்பள்ளயம்

- பாண்டவர்கள் முதலான மகாபாரதப் பாத்திரங்களாக வேடமிடுதல்.

- வேடமிடுவதற்கு பரம்பரை உரித்துடையவர்கள் இருக்கிறார்கள் .

- மகாபாரத கதையை நிகமனழ்த்துவதாக சடங்கு இடம்பெறும்.

# புத்தளம்-உடப்பு

- முந்தல் கிராமங்களில் சிறப்பு பெறுகிறது.
- உடப்பு கிராம மக்கள் தங்களை பாண்டவர்களது வம்சமாக கருதுவார்கள்.
- உடப்பு திரௌபதையம்மன் ஆலயம் அண்மைக் காலத்தில் சத்தியபாமா ருக்மணி சமேத பார்த்தசாரதி கோயிலாக மாற்றம் பெற்றுள்ளது.
- மகோற்சவம் –மார்கழி மாதம் இடம்பெறும்.(பார்த்தசாரதி)

* திரௌபதையம்மன் வருடாந்தச் சடங்கு-ஆடிமாதத்தில் 18 நாட்கள் இடம்பெறும்.

*18 ஆம் நாள் தீமிதிப்பு சிறப்பானது.

*19 ஆம் நாள் தருமர் பட்டாபிஷேகம் இடம்பெறும்.

* மகாபாரத பாத்திரங்களாக வேடம் புனைதல் இடம்பெறும் .

# வைரவர் வழிபாடு






# 1. ஆகம முறைப்படியும் 2.ஆகமம் முறை சாராதும் நடக்கும்.

- மர நிழலில் திரிசூலம் வடிவில்-எளிமையான முறையில் வழிபடலாம்.
- பரிவார தெய்வங்களுக்கு மத்தியில் கர்ப்பக்கிருகத்தில் மூலமூர்த்தியாக வழிபடலாம்.
- விசேட தினங்கள் முதல் நித்திய, நைமித்திய நெறிகளில் மகோற்சவம் வரை வழிபாடுகள் இடம்பெறும்.
- காவற் தெய்வம், இரத்தபலியேற்கும் தெய்வம், கிராமத்தெய்வம் என்று கருதப்பட்டு வழிபடப்படுகிறார்.

- சிவகுமாரர் ,சிவமூர்த்தம் ஆகவும் வழிபடப்படுகிறார்.
- சிவனுக்கு நிகர் என்று ஆணவம் கொண்ட பிரமனின் ஐந்து தலைகளுள் ஒன்றை கொய்தார்.
- அப்பர் சுவாமிகள் சிவனை வைரவராக கருதி “பிரமன் தன் சிரம் அரித்த பெரியோய் போற்றி”என்று துதிப்பார்.

# வைரவர் தோற்றப் பொழிவு

- உடுக்கு,சூலம்,கபலாம் என்பவற்றை ஏந்தியிருக்கிறார்.
- ஆடையற்ற கோலத்திலே திகம்பரராகக் காட்சியளிக்கிறார்.
- அக்கினி சுவாலைப்போல் மேல் நோக்கி எழுந்த சிவந்த சடைகளோடும் கோரப்பல்லுடன் திகழ்கிறார்.
- பாம்பையே அரைஞாணாகவும் பூணூலாகவும் அணிந்திருக்கின்றார்.
- நாயை வாகனமாகக் கொண்டுள்ளார்.



- வைரவருக்குரிய திருநாமங்களுள் ஒன்று சேத்திரபாலகர் என்பதாகும்.

---

- ****சேத்திரம்-இடம்,தலம்

  ****பாலகர்-பரிபாலிப்பவர்,காவல்

செய்பவர் என்று பொருள்.

●கோயில், நகரங்கள் கிராமங்களில் காவல் தெய்வமாக வீற்றிருக்கார்.

- ஆகம வழியில்-ஞான வைரவர், காலவைரவர்,மகாவைரவர் என்றும்
- கிராமிய வழிபாட்டு முறையில்-சுடலை வைரவர், காட்டு வைரவர், இரத்த வைரவர் என்ற பெயர்களில் சுட்டப்படுகிறார் .
- மக்களின் அச்சம் போக்குபவர்.
- சுடலை,காடு என்பவற்றில் வீற்றிருப்பவர்.
- குலதெய்வமாக திகழ்கிறார்.
- விசேட தினங்களில் பொங்கல், வடைமாலை சூட்டி வழிபடுவர்.
- சித்திரைப் பரணி,ஐப்பசி பரணி,தை மாத முதலாம் செவ்வாய் விசேட தினங்களாகும்.
- ஆண்டுக்கு ஒரு முறை வேள்வி சடங்கு இடம்பெறும். காலவோட்டத்தில் இவ் வேள்வி முறை அருகிசாத்வீகமான முறையில் பொங்கல் வழிபாடு இடம்பெறும்கிறது.


# நாட்டார் கலைகள்

- நாட்டார் வழிபாட்டில் ஒரு அம்சமாக நாட்டார் கலைகள் காணப்படுகிறது.
- அம்மானை,சிந்து பாடப்படுகிறது.
- பின்னணி இசை கருவிகள்-உடுக்கு,மத்தளம், சல்லரி
- கூத்துக்கலை சிறப்பிடம் பெறுகிறது. (கோயில் வீதியில் இடம்பெறும். )
- திரௌபதையம்மன் ஆலயம்-பஞ்சபாண்டவர் வேடமிட்டு சடங்கு இடம்பெறும்.
- காத்தவராயன் கூத்து-நேர்த்தி அடிப்படையில் இடம்பெறும்.
- கூத்துக்கலை-ஆட்டம்,பாட்டு,வாத்தியம், ஒப்பனை தன்னகத்தே கொண்டது.
- கரகம், காவடி
- ஒப்பனை சிறப்பிடம் பெறுகிறது.






# கரகம், காவடி, கும்மி,ஒயிலாட்டம்






# அலங்காரக்கலை

- கும்பம் அலங்கரித்தல்.
- கோயில் வளாகத்தை அலங்கரித்தல்.
- தோரணங்கள் மூங்கில் கழிகளாலும் குருத்தோலை, இலை,குழை முதலானவற்றாலும் வாயில் தோரணங்கள் அமைக்கப்படுகின்றது.

# அலங்கார கலைகள்

## கோயில், வலாகம் தோரணங்கள்,கும்பம்








நன்றி